THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Six thousand five hundred assessable institutions and 7,209 minor institutions not assessable by the department.

(*b*) 899.

(*c*) 167.

SRI P. G. MANICKAM : ஸார், டிரஸ்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள கோயில்களில் ஹரிஜனங்களை டிரஸ்டிகளாக நியமிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ? அதன் பிரகாரம் எல்லா கோயில்களிலும் ஹரிஜனங்களை டிரஸ்டிகளாக நியமிக்கப்படவில்லை என்பது தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூடிய வரையில் ஹரிஜனங்களையும் டிரஸ்டிகளாக நியமிக்கப்படவேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் கொள்கை. அதை அனுசரித்து நியமிக்கப்பட்டும் வருகிறார்கள். 167 ஆலயங்களில் இது வரையில் ஹரிஜனங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் கூட முன்பு இல்லாத ஆலயங்களில், உதாரணமாக திருவண்ணாமலையில் ஒரு ஹரிஜனை டிரஸ்டியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய தகுதியை யெல்லாம் பார்த்துத் தான் டிரஸ்டிகளாக நியமிக்க வேண்டியிருக்கிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இந்த மாதிரி கோயில்களுக்கு டிரஸ்டிகளை நியமிப்பதில் கோயிலிலேயே நம்பிக்கையில்லாதவர்களை நுழைந்துவிடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ? டிரஸ்டிகள் நியமிக்கப்படுவதில் பெண்களுக்கும் இடம் கொடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம்பிக்கையை யெல்லாம் சரிவர பரிசோதனை செய்வதென்பது சுலபமல்ல. கூடிய வரையில் ஆலயங்களில் நம்பிக்கையுள்ளவர்களையே டிரஸ்டிகளாக நியமிக்கப்படுகிறது. பெண்களும் டிரஸ்டிகளாக நியமிக்கப்படுகிறார்கள். பெண்களுக்கு ஆண்களை விட பக்தி அதிகம் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது.

House rent allowance to teachers in aided educational institutions.

* 296 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any house rent allowance is paid to teachers in aided educational institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

Location of industrial concerns.

* 298 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the names, details and the location of the industrial concerns started in the State during the past two years under the State Aid to Industries Scheme together with the figures about the financial aid given to each?

THE HON. SRI R. VENKATARAMAN : A list of industrial concerns which were granted loans under the Madras State Aid to Industries Act, 1922 during 1955–56 and 1956–57 has been printed and placed on the table of the House.

---

* Printed as Appendix III on pages 614–622 *infra*.

27th July 1957]

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தக் கடன் கொடுத்த தொழில்களில் எந்தத் தொழில் இப்போது நடக்கிறது ? எது நடக்கவில்லை? இதில் லாபகரமாக நடக்கக்கூடியது எத்தனை ? நஷ்டத்தில் நடக்கக்கூடியது எத்தனை ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது தனியார் நடத்துகிற தொழிலுக்கு சகாயமாகக் கொடுக்கிற தொகை. எந்தெந்தத் தொழில் லாபகரமாக நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது. கடன் தவணையை சரிவர கட்டுகிற வரையில் நமக்கு அதைப் பற்றி கவலையுமில்லை.

District Welfare Officer for Tindivanam taluk.

* 299 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to appoint an additional District Welfare Officer for Tindivanam taluk?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

Paddy and sugarcane cultivation in Tanjore district.

* 300 *Q.*—SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Home be pleased to state the acreage of land under—

(i) paddy cultivation; and

(ii) sugarcane cultivation in the Tanjore district during the years 1951–52 and 1956–57?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The following are the figures for Tanjore district :—

(i) 1,336,493 acres were under paddy during 1951–52 and 1,355,000 acres during 1956–57; and

(ii) 3,681 acres were under sugarcane during 1951–52 and 8,000 acres during 1956–57.

SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, கரும்பு விளைச்சல் ஆகிற பகுதி சென்ற ஐந்து வருஷ காலத்தில் அதிகமாயிருப்பது உண்மையாகவே நெல் விளைச்சலாக இருந்திருக்கவேண்டியது. இது நெல் விளைச்சலை பாதிக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கரும்பு விளைவிக்கப்படுகிற பகுதியில் வேறு தானியங்கள் விளைவிக்கப்பட்டிருக்கலாம். முன்பு நெல் விளைவிக்கப்பட்டிருக்கலாம். தஞ்சையில் 13 லக்ஷம் ஏக்கரில் நெல் விளைவிக்கும் போது 5,000 அல்லது 6,000 ஏக்கர் வரையில் கரும்பு புதிதாகச் சாகுபடி செய்வது அதிகமில்லை. அதோடு அரிசி சாப்பிடுபவர்களுக்கு சர்க்கரையும் வெல்லமும் கூட வேண்டியிருக்கிறது.

SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் சர்க்கரை தொழிற்சாலை ஏற்படுத்துவதானது வரப்போகிற நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதாக ஆரம்பிக்கப் படுகிறது. இதனால் இந்தத் தொழிற்சாலைகளை நில சீர்திருத்தம் வந்த பிறகு ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே இந்தச் சபையில் தெரிவித்திருக்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து கரும்பு ஆலைகளை ஆரம்பிக்கின்றவர்கள் கூட தப்பித்துக்கொள்ள முடியாது. அந்த முறையில் அந்தச் சட்டம் வகுக்கப்படும்.